(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **51**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 பெப்புருவரி 12, வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பிரதிச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சர், 2011 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சர்,

(i) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 20 ஆந் திகதிய 1941/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

(ii) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 சனவரி 12 ஆந் திகதிய 1949/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(iii) 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 (இ) ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 20 ஆந் திகதிய 1941/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(iv) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், மதுபானங்களின் செறிவின் அளவு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 1945/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 982)

(v) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், வருடாந்த உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 1945/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 983, 984)

(vi) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், ஹோட்டல்களில் மதுசாரப் பாவனையுடன் தொடர்புபட்ட கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 986)

(vii) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 4 ஆம் மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ், வெளிநாட்டு மதுபான விநியோகம் மற்றும் இடப்பெயர்வு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 985)

(viii) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 987)

(ix) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 நவெம்பர் 20 ஆம் திகதிய 1941/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 978, 979, 980)

(x) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய 1943/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

மதுவரி அறிவித்தல் இலக்கம் 981)

(xi) 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 01 ஆம் திகதிய 1947/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(xii) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 26 ஆவது பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கைத் தேயிலை சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**2. மனுக்கள்:**

(1) (i) பண்டாரகம, வெல்மில்ல சந்தி, கிதெல்பிட்டிய, கெஸ்பாவ வீதி, இல. 108/1 இல் வதியும் திரு. குணபால விஜேசூரியவினது 2015.12.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பாதுக்கை, வட்டரெக்க, ஆட்டிகல வீதி, பானலுவ தோட்டம், சமகி மாவத்தை, இல. 80/29/1 இல் வதியும் திரு. எம்.ஏ.எஸ்.டி. பெரேராவினது 2015.10.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பன்னிபிட்டிய, கொட்டாவ, பின்ஹேன, சிரிமல் இடம், இல. 39/10 இல் வதியும் திரு. பி.ஏ. ஜினதாசவினது 2015.10.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) கென்கல்ல, மல்பான, "ஸ்ரீபாலி", இல. 12/டி யில் வதியும் திரு. ஆர்.ஜி.பி. கமலதேவவினது 2015.08.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) மஹரகம, நாவின்ன, இஸிபதன வீதி, இல. 78/1, இல் வதியும் திருமதி சுவினிதா மல்லிகா பெரேராவினது 2015.10.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

(2) (i) தெவிநுவர, கிரலவெல்ல வீதி, இல. 69 இல் வதியும் திரு. பீ.பி.பிரகதி தர்சனவினது 2016.01.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாத்தறை, இஸ்ஸதீன் நகரம், மீரா வீதி, இல. 102 இல் வதியும் திரு. சந்திரபால வீரகோனினது 2016.01.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) சுல்தானாகொட, கபுஹேன, அகுருகொட, சரசவி கலை நிறுவனத்தில் பணிபுரியும் திரு. எச்.எம். ஜயவர்தனவினது 2016.01.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மாத்தறை. வல்கம, சமகி மாவத்தை, இல. 69/5 இல் வதியும் திரு. எச்.ரீ. மெண்டிஸினது 2016.01.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) மாத்தறை, வெரகம்பிட்ட, ஸ்ரீ தர்மவங்ச மாவத்தை, இல. 143/பீ யில் வதியும் திருமதி ஹேமலதா ராஜபக்ஷவினது 2016.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) மாத்தறை, இஸ்ஸதீன் நகரம், யெஹியா வீதி, இல. 71 இல் வதியும் திருமதி கே.ஜீ. மல்லிகாவினது 2016.01.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) காலி, வலஹந்துவ, கபரயன்முல்ல, பிரயங்கர உயனவில் வதியும் திரு. கே.பி. ஆரியதாசவினது 2016.01.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii) காலி, மாகல்ல, சுற்றுவட்ட வீதி, இல. 266/1 இல் வதியும் திருமதி லீலா ஹெட்டிஆரச்சியினது 2016.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ix) அகுரஸ்ஸ, வில்பிட, மெதவத்தவில் வதியும் திரு. பி.ஆர். ஞானசிரியினது 2016.01.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(x) திருகோணமலை, மஹமாயாபுரம், இல. 70/1 இல் வதியும் திருமதி. எஸ்.எச். ரதிகா சாமென்னினது 2016.01.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xi) பத்தரமுல்ல, பெலவத்த, தியவன்னா பூந்தோட்ட மாவத்த, இல. 51ஆர் இல் வதியும் திரு. வி.ஏ. எதிரிமான்னவினது 2016.01.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பதிறண சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. பாராளுமன்ற அலுவல்கள் (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இன்றைய தினம் அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற அலுவல்கள் (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2ஆம், 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 20(7) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம்** : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேணை சபைக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார் பிரேரித்தார்.

பிரேணை சபைக்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனடியாக பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழு நிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 27 ஆம் வரி முதல் 31 ஆம் வரி வரையிலான (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை அங்கு சேர்க்க வேண்டுமென கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

| | |
|---|---|
| "24.0 மீற்றர்களுக்கு மேற்படவும் 45.0 மீற்றர்களுக்கு குறைவாகவும் | ரூ.25 மில்லியன் |
| "45.0 மீற்றர்களுக்கு மேற்படவும் 75.0 மீற்றர்களுக்கு குறைவாகவும் | ரூ.50 மில்லியன் |
| "75.0 மீற்றர்களுக்கு மேற்பட்டது | ரூ.100 மில்லியன் |

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 தொடக்கம் 5 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

சட்டமூலம் அதற்கமையச் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

(பி.ப.2.25 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**6. வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்**: கௌரவ புத்திக பத்திரண, கௌரவ வஜிர அபேவர்தன அனுவதிக்க பின்வருமாறு பிரேரித்தார்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.[பா.6/ '15]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுதல்:** கௌரவ அப்துல்லா மஹரூப் கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட் அனுவதிக்க பின்வருமாறு பிரேரித்தார்,— திருகோணமலை கடற்படை முகாம் வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் உள்ள பிரதான இராணுவத் தளமாக இருந்த போதிலும், யுத்த முடிவின் பின் புல்மோட்டை தொடக்கம் லங்காபட்டணம் வரை பல சிறிய கடற்படை மற்றும் இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதோடு அந்த முகாம்கள் தொழில்முயற்சியாண்மை, மீனவர்கள் மற்றும் பொதுமக்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு தடையாக அமைவதனால், மக்களின் சுபீட்சகரமான வாழ்விற்கு உதவும்முகமாக அந்த இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுதல் வேண்டுமென இந்தப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.141/ '15]

"இப்போது கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்குவாராக" என உள்ளக விவகாரங்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.3.50 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார். )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. நாட்டினுள் காணப்படுகின்ற யுத்தகால சிதைவுகளை புனரமைத்து மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தல்:** கௌரவ டக்ளஸ் தேவானந்த, கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன் அனுவதிக்க பின்வருமாறு பிரேரித்தார்,— நாட்டில் நிலவிய யுத்த நிலவரம் காரணமாகவும் இராணுவ நடவடிக்கைகளினாலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும் அழிவடைந்த நிலையிலுள்ள கட்டிடங்கள், நீர்த்தாங்கிகள், புகையிரதங்கள், பஸ் வண்டிகள், விமானங்கள் என்பவற்றை காட்சி நிலையங்களாகவும் பாதுகாப்பு இடங்களாகவும் அரச செலவில் தொடர்ச்சியாகப் பராமரித்துப் பேணி வருதல் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தடையாக இருப்பதனால், நாட்டின் இன்றைய இளைஞர் சந்ததியினர் மற்றும் எதிர்கால சந்ததியினர் மத்தியில் நாட்டில் ஏற்பட்ட யுத்தகால அழிவுகள் தொடர்பான நினைவுகளை இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் இவ்வாறு அழிவுற்ற இடங்களையும் ஏனைய உடைமைகளையும் மீண்டும் புனரமைத்து மக்களின் நலன்கருதி அவற்றை பாவிப்பதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.146/'15]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் கணிப்பிடப்படும் 40% கழிப்பனவு எல்லையை கொடுப்பனவுகளுடன் கூடிய மொத்தச் சம்பளத்திலிருந்து கணிப்பிடல்:** கௌரவ பிரசன்ன ரணவீர, கௌரவ இந்திக அனுருத்த ஹேரத் அனுவதிக்க பின்வருமாறு பிரேரித்தார்,— அரச நிதி ஒழுங்குவிதிக் கோவைக்கமைய கடன் பெறும்போது 40% கழிப்பனவு எல்லை அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதால், அரச ஊழியர்களுக்கு அவசர தேவையொன்றின்போது அல்லது வீட்டுத் திருத்தவேலைக்கு அரசாங்க வங்கியொன்றிலிருந்து அல்லது அரச துணை நிறுவனமொன்றிலிருந்து கடன் தொகையொன்றை பெறுவதற்கு மேற்படி காலங்கடந்த சட்டம் இடையூறாக இருக்கின்ற போதிலும், ஏழாண்டு ஆதனக் கடனை பெறுகையில் ஐந்தாண்டு கால நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்படுவதால், மேற்படி கழிப்பனவு எல்லை ஏற்புடையதாகாதென்ற போதிலும், அரச சேவைக்கு புதிதாக இணைகின்ற அரச ஊழியரொருவருக்கு மேற்படி கழிப்பனவு எல்லை காரணமாக கடன் தொகையொன்றைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருப்பதால் 40% கழிப்பனவு எல்லை கொடுப்பனவுகளுடன் கூடிய மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.148/' 15]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு (ஆசிரியர் ஆலோசகர் சேவையினை ஸ்தாபித்தல்):** “இப் பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” உள்ளக விவகாரங்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 6.45 மணிக்கு 2016 பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.